DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 19/2021**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | செல்வம் | Caste: | |
| Father's Name: | கோவிந்தன் | Calling: | விவசாயம் |
| Village: | கே. வலசை | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.02.2026

( 1,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் பரமக்குடி தாலுகாவில் உள்ள கே. வலசை கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 சாத்தன் , அ.சா.2 சௌந்தரபாண்டியன் ஆகியோர்களை தெரியாது. சா. ப.சா.3 ராஜாவை தெரியும். வினோத்குமார் சம்பவ காலத்தில் நான் வேலை பார்த்த மணல் குவாரியின் உரிமையாளர் ஆவார். எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:56:41 +0530

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 04.03.2021ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் வினோத்குமார் என்பவரது குவாரியில் வேலை செய்து கொண்டிருந்தபோது TN65AJ0786 சிவப்பு நிறமுள்ள Swift காரில் சூடியூர் கிராமத்தில் வசிக்கும் 1 மற்றும் 3 எதிரிகள் வந்தார்கள் என்றும் அதனை தொடர்ந்து TN 65 5655 என்ற சிவப்பு நிற MIT Scooter ல் 2 வது எதிரி மணிமாறன் வந்தார் என்றும் அப்போது வாட்ச்மேனாக வேலை பார்த்துக்கொண்டிருந்த சாத்தன் என்பவரிடம் 1ம் எதிரி எங்கடா உங்க முதலாளி வெளியூரில் இருந்து இங்கு வந்து குவாரி நடத்திவிட்டு போய்விடுவானா உங்கள் எல்லாரையும் கொல்லாமல் விடமாட்டேன் தாயோழிகளா என அசிங்கமாக திட்டி மிரட்டினார்கள் என்றும் அதற்கு சாத்தன் ஓனர் இல்லாத நேரத்தில் ஏன் இங்க வந்தீங்க வெளியில் போங்க எனக் கூறினார் என்றும் அதற்கு 1ம் எதிரி ஏன்டா நத்தை பொறுக்கி திங்கிற ஈனச்சாதி பள்ளபயல்களா, என்னையாவாடா வெளியே போக சொல்கிற என அசிங்கமாக கத்திக்கொண்டே நான் அணிந்திருந்த செருப்பை கழற்றி சாத்தன் முகத்தில் அடித்தார் என்றும் அருகில் இருந்த 3ம் எதிரி இந்த பள்ள பயலை அடித்து கொன்னாத்தான் மித்தவனுக்கு பயம் வரும் என்று சொன்னார் என்றும், 2ம் எதிரி சாத்தனை எட்டி மிதித்தார் என்றும் சாத்தன் கீழே விழுந்ததும் நானும் அங்கு சாப்பாடு கொண்டு வந்திருந்த சுந்தரபாண்டியன் என்பவரும் கிட்டாச்சி ஆப்ரேட்டராக வேலை செய்த ராஜா ஆகியோரும் சேர்ந்து சத்தம் போட்டு விலக்கிவிட்டோம் என்றும் போகும்போது 1ம் எதிரி சாத்தனை பார்த்து இப்ப தப்பிச்சிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார் என்றும் அவர்கள் தாக்கியதில் சாத்தனுக்கு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:56:45 +0530

நெஞ்சுவலி மற்றும் படபடப்பு ஏற்பட்டதால் சாத்தனை சுந்தரபாண்டியன் பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும் பின்பு 07.03.2021ம் தேதி பார்த்திபனூர் காவல் ஆய்வாளர் சாத்தனை விசாரிக்க மேற்படி விவரங்களை கூறி எதிரியின் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தார் என்றும் அதுசம்பந்தமாக பார்த்திபனூர் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும் இதுசம்பந்தமாக 07.01.2021ம் தேதி பரமக்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகளை தெரியாது என்றும் வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:56:49 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)